**Editor's Note**

Please address all communication for the English pages to The English Editor, 'Morning Star' Uduvil, Chunnakam

# THE MORNING STAR

*Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. QB/59/300/26/82*

Established: 1841: A Christian Weekly ; Published Every Friday

Vol. 142 Jaffna, Friday, 22nd October, 1982 No. 43

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

**Subscription**

Inland: Rs. 35/- per year.

Single issues are available at the Varany Mission Sales Centre, Model Market, Jaffna at Re. 1/- per copy.

*Apply to:*

The Manager, 'Morning Star', Vaddukoddai.

## The Uduvil YMCA

At the Annual General Meeting of the Uduvi YMCA held on the 16th October at the YMCA Hall at Uduvil, the following have been elected office-bearers for the ensuing year:—

*President*: Mr. L. S. C. Canagasingham. *Vice-President*: Rev. R. Thurairajah. *Hony. General Secretary*: Mr. E. S. Curtis. *Hony. Treasurer*: Mr. Banny Rajaratnam. *Board of Directors*: Rev. N. W. G. Sugunarajah and Messrs J. J. Niles, T. Thangaratnam, Welch T. Balasingam, S. Kumaraswamy, T. A. Tambiappah, M. Thambithurai, Prince Ratnam, E. R. Christopher, V. Rajkumar and Mithiran Suhirtharatnam.

## The Sri Lanka Pharmaceutical Society

The Ninth Annual General Meeting of the SLPS was held on 10-10-82 at the Colombo Medical Faculty. Dr. Tilak Weerasinghe, Head of the Department of Pharmacology at Colombo and Dr. Dennis J. Aloysius, President of the Sri Lanka Medical Association were the Chief Guests.

Dr. Weerasinghe said that the drug bill of the government in 1981 was Rs. 180 million. This could have been trimmed by 10 per cent if there was an efficient pharmaceutical service in the Health Department. The Colombo Medical Faculty was making, he said, arrangements for a three year diploma course for Pharmacists fram next year.

Dr. Dennis Aloysius said that the recent death of Professor Wilfred Lionel Head of the Department of Pharmacology at the Colombo Medical School was a great loss to the country.

The Sri Lanka Medical Association will be laying the Foundation Stone for the Lionel Memorial Auditorium in October 27, 1982.

## The Vancouver Assembly

**(24th July to 10th August, 1983)**

The opening celebration of the *Vancouver* Assembly of the World Council of Churches will be on the 24th of July, 1983 at the campus of the University of British Columbia on the West coast of Canada. Theological Schools all over the world are now engaged in Assembly preparations. The Assembly theme is *Jesus Christ, the Life of the World.*

Accredited Visitors, numbering one thousand will be selected to attend the Sixth Assembly of the WCC at Vancouver. They are expected to be full time participants and should be responsible for their own travel, board and lodging plus an Assembly Fee of Canadian dollars 175. They will have access to plenary sessions, official Assembly publications and even bus service from downtown hotels.

Inorder to facilitate maximum participation in the Assembly, related activities of interest to theological education are being planned.

The Summer School Sessions of the Vancouver School of Theology (VST) will run parallel with and respond to the General Assembly programme.

A special conference will also take place at Bellingham, Washington (55 miles from Vancouver) from July 23 to August 1, 1983.

The following are some of the major resources available for the Vancouver Assembly. They are avilable from *The Publications Office World Council of Churches, 150, route de Ferney, 1211 Geneva 20, Swizerland.*

(a) "Acting in Faith" by Leon Howell. US dollars 4.95.

(b) "Images of Life" — an invitation to Bible Study. US dollars 3.50.

(c) "Feast of Life" by John Poulton. US dollars 3.95.

(d) "Issues"—US dollars 3.95.

## Jaffna College Technical Institute

The Jaffna College Technical Institute reached yet another milestone in its brief history with the completion of the new Administration Block as part of its phase two development programme. The beautiful and impressive building was dedicated at a quiet function on Monday the 18th of October at 4.00 p. m. by the Rt. Rev. D. J. Ambalavanar. The members of the Technical Institute Council and the Staff of the Institute were present. The Engineer Contractor, Mr. P. Devarajah of Waragans hosted the gathering to Tea.

---

*In brief*

O *Sri Lanka's population*, generally considered young is "growing older" according to a sampling of the figures gathered during the 1981 National Census. The proportion of under 15s has dropped to 35.3 per cent from 39 per cent in the 1971 Census.

O *The Cancer Clinic at Tellippalai Government Hospital* will soon be able to function when the Cobalt Unit which has already arrived, is assembled by the Canadian technicians who are expected shortly in the country.

O *The Suthanthiran Press* which publishes the bi-weekly paper of the Tamil Eelam Liberation Front was sealed by armed police on 20-10-82. Mr. A. C. Chandrakason, son of the late Mr. S. J. V. Chelvanayakam QC, is the Proprietor of the Press.

## Medicine, 'an Art and a Science'

Writing in the September 1982 issue of the Organisation of Professional Association Journal, Dr. Shelton Cabraal Director of the Post Graduate Institute of Medicine, Sri Lanka says that at the moment a physician's conscience is his only guide and the patients only protection. A patient, therefore would be better served by the exercise of a code established by a corporate body.

Dr. Cabraal goes on to say that Albert Schweitzer, emphasising the relationship a man has with his physician urged us to remember at all times that medicine is not only a science but also the art of letting our own individuality interact with the individuality interact with the individuality of the patient.

Acceptance of this idea is in no way reduces the importance of or the need for a proper scientific basis for our practice of medicine but it goes a long way towards resolving the old and the vexed question of whether medicine is an art or a science. Medicine is of course, neither an art nor a science but a combination of both

---

*Appreciation*

## Mrs. Sellaratnam Nathan

The death occurred recently of Mrs. Sellaratnam Nathan daughter of the late Mr. & Mrs. J. K. Saravanamuttu of "Sarastan" Manipay. She was 86 years old.

Mrs. Nathan was an old girl of Chundukuli Girls School where she later taught after obtaining her M. A. She was one of the earliest tamil girls to Graduate from the Madras University. She was later the Vice-Principal of Rasa Govt. School Sandilipay for several years.

She was an active social and religious worker. She took a keen interest in the Rural Development Work at Manipay and started many Sewing Centres for girls and Adult classes.

She also evinced freely in developing the Co-operative Savings Movement in Jaffna.

The Rev. S. P. Jeyasingham in his tribute at the funeral service referred to her noble qualities. She was an educated and talented lady who was always ready to help those in distress, what God gave her she gave it to mankind. She was very punctual in attending services and took a active part in the Manipay Parish and Women's Guild activities.

The funeral took place at the residence of her Niece Mrs. Sugirtham Arnold at Manipay where the Rev. Sam Thampoe and Rev. Jeyasingham conducted the services.

## The Sacredness of Life

*(World Sanctity of Life Sunday)*

I thank Thee, O God for the
gift of life.

I thank Thee for parents who
did not deny
me this privilege and who made
it possible
for me to enjoy the fullness
of life by their
love and sacrific.

I thank Thee for friends who
by their
appreciation of the significance
of life
guided me towards the higher
values.

I thank Thee for men and
women who
constantly taught me that life
was a sacred
gift and that no creature of
Thine was
beyond Thy love and care.

O God give me a generous
and kindly heart
that I, as one who has enjoyed
so much in
life, may never deny the same
gift to others.

Through Jesus Christ our Lord.
AMEN

*The Rev. Frank Lee*
*President 1981 - 1981*
*Free Church Council of Wales.*

---

*Wedding*

**Gunasingham — Senathirajah**

The Chavakachcheri church was the venue of a pretty wedding on Monday the 20th of September when Dr. Rohan Gunasingham led to the Altar, Miss Sulojini Senathirajah, daughter of Mr. & Mrs. S. Senathirajah of Palai. Dr. Gunasingham presently of tne Christian Medical College Hospital, Vellore is the second son of the late Mr. V. Gunasingham and Mrs. Pushpam Gunasingham of Chavakachcheri. The service was conducted by the Rt. Rev. D. J. Ambalavanar assisted by the Ven. Sam D. Horsbington and the Rev. J. J. Ratnarajah. The Rev. L. N. Hitchcock preached the Homily.

---

*Church News from Abroad*

**Luther Year 1983**

The Five hundredth Anniversary of the birth of the great reformer, Martin Luther is to be commemorated next year in Germany. The EKD (Evangelische Kirche in Deutschland), the Bulletin of the Evangelical Church in Germany will issue a magazine giving a "popular presentation" of Martin Luther's Life and theology describing the impact he has had on the church, culture and society.

# உதயதாரகை

**UTHAYATHARAKAI**

Estd. 1841.

கிறிஸ்தவ வார இதழ்.] [வெள்ளிதோறும் வெளிவருவது.

" நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவம் எந்தக் குலத்துக்கும் இழிவாம் "


## தாரகை ஒளி

" அவர்தாம் பெருமை யாவும் பெற்றிட வேண்டும்
நானோ சிறுகச் சிறுகத் தேய்தல் வேண்டும் " — கவிதை - தாயா.


மலர் 142 ] 22 — 10 — 1982 [ இதழ் 43


## "மெத்த வளருது வடக்கே"

மகாகவி சுப்பிரமணியபாரதியார் வாழ்ந்த காலத்தில் தமிழ்மொழி மிகவும் தாழ்ந்த நிலையில் இருந்து உயர்கல்வி விஞ்ஞானம் மருத்துவம் போன்ற சகல துறைகளும் தமிழுக்குப் புதிதாக இருந்தன. தமிழின் நிலையைப்பற்றி ஒருவர் இவ்வாறு கூறினர் என்று பாரதி பாடினன்.

புத்தம் புதிய கலைகள் — பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்
மெத்த வளருது மேற்கே — அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை.

இன்று இந்தியாவிற்குச் செல்லும் கிறிஸ்தவன்

புத்தம் புதிய கலைகள் — இறையியல்
புத்தகம் நாளிதழ் நாடகம்
மெத்த வளருது வடக்கே அந்த
மேன்மைக் கலைகள் ஈண்டு இல்லை.

என்று பெருமூச்சு விட வேண்டியிருக்கிறது. தென்னிந்தியாவிற்கு யாழ்ப்பாணம் ஒருகாலத்தில் கலை, வேதசாஸ்திரம், வேதாகம மொழிபெயர்ப்பு, பிரசுரவேலை போன்ற பல துறைகளில் வழிகாட்டி வந்தது. ஆனல் இன்று தென்னிந்தியா கலை, நூலாக்கம், இறையியற் கல்வி, பத்திரிகை போன்ற துறைகளில் நாம் எட்டிப்பிடிக்க முடியாத அளவுக்கு மேலோங்கி நிற்கின்றது. C. L. S. CACCS, CISRS, U. T. C., T. T. S., M. C. C., C. M. C., போன்ற ஸ்தாபனங்கள் ஆற்றிவருகின்ற பணிகளை நாம் பார்க்கும்பொழுது பிரமித்து நிற்க வேண்டியவர்களாகின்ருேம். சி. எல். எஸ். ஸ்தாபனத்தார் தென்னிந்தியாவிலேயே முதல்தர பிரசுரிப்பாளர்களாகத் திகழ்கின்றனர். புத்தம் புதிய கலைகள் பஞ்ச பூதத்தின் செயல்கள் கூறும் நூல்கள் தினந்தோறும் வெளிவந்துகொண்டிருக்கின்றன. இவ்வாறே இறையியற் கல்லூரிகளிலிருந்து அரும்பெரும் சிந்தனைகளைத்தாங்கி நூல்கள் வந்துகொண்டிருக்கின்றன. ஆராய்ச்சி, கலந்துரையாடல், மக்கள் தொடர்பு போன்ற துறைகளில் கிறிஸ்தவ திருச்சபை மகோன்னத வளர்ச்சியடைந்திருக்கிறது. ஸ்டீபன் நீல் என்னும் அத்தியட்சர் தாம் எழுதிய இந்திய திருச்சபை வரலாற்றில் இந்தியாவில் பிராமணருக்கும் பார்சிகளுக்கும் அடுத்தபடியாகப் படித்தவர்கள் கிறிஸ்தவர்களே என்று குறிப்பிட்டுள்ளார். கிறிஸ்தவ திருச்சபை இன்று கல்வி, கலை சமூக மாற்றம் போன்றவற்றில் பெருந்தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பது மறுக்கவோ மறைக்கவோ முடியாத உண்மையாகும்.

தென்னிந்திய திருச்சபையில் நாம் அங்கத்தவர்களாய் இருப்பது நமக்குக் கிடைத்த பெரிய சலாக்கியமேயாகும். இதனல் ஆங்கு நடைபெறும் அதிசிறந்த வளர்ச்சிகளை அறியவும் அவற்றிற் பங்கு கொள்ளவும் நமக்கு வாய்ப்பு ஏற்படுகிறது. தென்னிந்தியாவுடனன தொடர்பை எண்ணி பெருமைகொள்ளும் நாம் அதே சமயம் அத்தகைய வளர்ச்சிகள் நமது நாட்டிலும் மேலோங்க ஆவன செய்ய வேண்டும்.

---

## ஆதீனத்தின் வருடாந்த விழா

தென்னிந்திய திருச்சபை, யாழ்ப்பாண ஆதீனத்தின் முப்பத்தைந்தாம் வருடாந்த விழா இம்மாதம் 2ஆம் திகதி, சனிக்கிழமையன்று வட்டுக்கோட்டையில் கொண்டாடப்பட்டது. இந்த முழுநாட் கொண்டாட்டங்களில் ஆதீனத்தின் எல்லாச் சபைகளிலுமிருந்து ஏராளமானோர் பங்குபற்றினர். பிரதம அதிதிகளாகத் தென்னிந்திய திருச்சபை சினட் பேரவையின் பொதுச் செயலாளர் கனம் M. அசரையா அவர்களும் ஆசியக் கிறிஸ்த சங்கத்தின் பொதுச் செயலாளர் கலாநிதி யாப் கிம் ஹௌ அவர்களும் சமுகமாயிருந்து உரை நிகழ்த்திக் கொண்டாட்டங்களைச் சிறப்பித்தனர்.

காலை 8-00 மணிக்கு ஆசன ஆலயத்தில் தோத்திர ஆராதனை சங்கீத முறையிலான திருவிருந்து ஆராதனையாக நடத்தப்பட்டது. இந்த ஆராதனையில் நுணுவிற் சபை ஊழியன் திரு. D. S. தியாகராஜா அவர்கள் ஆதீனத்தின் ஒரு உதவிக் குருவாக அபிஷேகம் செய்து வைக்கப்பட்டார்கள். ஆராதனை ஆதீன அத்தியட்சர் மகாகனம் D. J. அம்பலவாணர் அவர்களினல் நடத்தப்பட்டது. திருமறைப் பாடங்கள் திரு C. வல்லிபுரம். திரு. R. K. தியாகராஜா (அபிஷேகன் தந்தை), திரு. A. இராஜசிங்கம் ஆகியோரால் வாசிக்கப்பட்டன. நுணுவிற் சபைச் சேகரக் குரு கனம் J. J. இரத்தினராஜா அவர்கள், செபமாலை நடத்தியதுடன் அபிஷேகனை ஆசார முறைப்படி அத்தியட்சர் முன் நிறுத்தினர்கள். கனம் A. C. மதனராஜ், கனம் S. மஹேபவன், கனம் M. இராஜகுலேந்திரன், கனம் S. ஜெயநேசன் ஆகியோர் திருவிருந்து பரிமாற உதவினர். சுமார் 400 பேர் திருவிருந்திற் பங்குபெற்றனர்.

இந்த ஆராதனையில் கனம் அசரையா அவர்கள் அருளுரை ஆற்றினர்கள். முதலாவது யாழ்ப்பாணத்திற்கும், குறிப்பாக இந்தக் கொண்டாட்டத்திற்கும் தாம் வரக்கூடியதாய்க் கர்த்தர் தமக்கருளிய சந்தர்ப்பத்தையிட்டுத் தமது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கடவுளுக்கு நன்றி செலுத்தினர்கள். பிலிப்பியர் 2:6 ஆம் வாக்கியத்தை ஆதாரமாகக் கொண்டு பிரசங்கித்துப் பின்வருமாறு எடுத்துக் காட்டினர்கள்.

1. கடவுளுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல் கிறிஸ்து அடிமையின் ரூபமெடுத்துத் தம்மைத்தாமே தாழ்த்தினர். இப்படியான கிறிஸ்துவையே நாம் நமது கர்த்தரும் இராஜாவுமாகக் கொள்ளுகிருேம். நமது இராஜா சேவை செய்யும் ஒருவர். மனித குமாரன் சேவை கொள்ளும்படியல்ல, சேவை செய்யும்படி வந்தார் எனத் தம்மைக் குறித்து அவர் சொன்னதும் அதுவே. நாம் அவருடைய சரீரத்தின் அவயவங்களாய் இருக்கிருேம். எனவே அவருடைய சேவையில் நாமும் பங்காளிகளாகவே இருக்கிருேம். அதற்காகவே சிலரை அத்தியட்சர்களாகவும் சிலரைக் குருமாராகவும் சிலரை உதவிக் குருக்களாகவும், மறறையோரை அப்போஸ்தலராகவும் அவர் அமைத்துள்ளார். கிறிஸ்து சேவை செய்யும் கர்த்தரென்றும் அவரது சபை அவரோடு உடன் சேவையாற்றும் சேவையாளக் கூட்டமென்றும் அப்போஸ்தலனுகிய பவுல் கொரிந்தியருக்கு எழுதிய 2-ம் நிருபத்தில் (4:5) காண்கிருேம். ஆகவே இந்த 20ஆம் நூற்ருண்டிற்கூட அவரைச் சேவை செய்யும் கர்த்தரென உலகம் அறிக்கை செய்யும்.

பிரதானமாக நீங்கள் ஒரு உதவிக் குருவை அபிஷேகம் செய்விக்கும் இந்த வேளையில் இந்தச் சேவையின் தாற்பரியத்தை அறிவிக்க மூன்று குறிப்புக்களைக் கூற விரும்புகின்றேன். ஏசாயா, எரேமியா, எசக்கியேல் தீர்க்கதரிசிகளின் வேலையை அடிப்படையாகக் கொண்டு இவற்றை நாம் காணலாம். 1. ஏசாயா அழைக்கப்பட்ட சம்பவத்தில் அவன் தனது பாவத் தன்மையைக் குறித்துப் பிரலாபிப்பதைக் காண்கிருேம். "நான் அசுத்த உதடுள்ளவன்; அசுத்த உதடுள்ளவர்கள் மத்தியில் வசிப்பவன்; என் கண்கள் கர்த்தரைக் கண்டனவே" என்கிறன். அப்பேர்ப்பட்டவனையும் கர்த்தர் தமது சேவைக்கு அழைத்தார்.

2. எரேமியா சேவைக்கு அழைக்கப்பட்டபோது ஒரு இளைஞனயிருந்தான். அவன் அதைக் குறித்து விசனமடைந்தபோது கடவுள் தமது வார்த்தைகளையே அவன் உதடுகளில் வைப்பதாக உறுதி கூறுகிருர். இது மிகுந்த பொறுப்புடைய ஒரு நிலை கடவுளின் வார்த்தைகளை எடுத்துக் கூறுவது; அவருடைய சித்தத்தை வெளிப்படுத்துவது; ஒரு புதிய உலகம் அமைக்கப்படுவதற்கு அவருக்கு உதவியாளராயிருப்பது, யாழ்ப்பாணத்தையும் அதிற் தற்போது காணும் பொருளாதார, சமூக, அரசியல் நிலைகளையும் உற்று நோக்கும்போது கர்த்தருடைய வார்த்தையை யாழ்ப்பாண மக்களுக்கு எடுத்துரைப்பது எவ்வளவு பொறுப்பு மிகுந்த ஒரு சேவையென நாம் உணரலாம்.

3 சிறையிருப்பின் அந்தரமான நிலையிலிருந்த தமது சனத்தின் மத்தியில் போய் வசிக்கும்படியும் அவர்கள் இருந்த மனக்குழப்பமான நிலையில் அவர்களுக்குத் தமது வார்த்தைகளை அவர்களுக்குக் கொடுக்கும்படியும் எசேக்கியேலைக் கர்த்தர் அழைக்கிருர். அவர்கள் இருந்த வேதனை நிறைந்த நிலையை 137ஆம் சங்கீதத்தில் நாம் காணலாம். அவர்களோடு, அந்த நிலையில், தன்னை ஒன்றுபடுத்திக்கொள்ளும்படி எசேக்கியேலைக் கர்த்தர் அழைக்கிருர்.

இந்த மூன்று குறிப்புகளுக்கூடாகவும் இந்த மகத்துவமான சேவைக்கூடாக வெளிப்பட வேண்டிய (1) குருத்துவ, (2) தீர்க்கதரிசன, (3) ஆயனுக்குரிய ஊழியங்களை நாம் காணக் கூடியதாயிருக்குமெனக் கனம் அசரையா அவர்கள் கூறினர்கள்.

ஆராதனையைத் தொடர்ந்து முற்பகல் 11-00 மணிக்குக் கதாப் பிரசங்கம் பாட்டுகள் அடங்கிய கதம்ப நிகழ்ச்சி யொன்று யாழ் கல்லூரியின் ஒட்லி மண்டபத்தல் நடைபெற்றது. உடுவில் மகளிர் கல்லூரிப் பிள்ளைகள் சிறப்புப் பாடல்கள் சிலவற்றை மிகத் திறமையுடன் பாடிக் கேட்டோரை மகிழ்வித்தனர். திரு. S. ஜெயநேசன் அவர்கள் காலஞ்சென்ற கவிஞர், கிறிஸ்தவக் கம்பன் என்னும் ஹென்றி அல்பேர்ட் கிருஸ்ணபிள்ளை அவர்களின் சீவியத்தை யொட்டிய ஒரு கதாப் பிரசங்கம் நிகழ்த்தினர்கள். கிறிஸ்த இலக்கியத்தைப் படித்துப்பார்க்கும் ஆவலைத் தூண்டுவதற்கும், நாம் வழமையாகப் பாடும் பாட்டுகளிற் சிலவற்றை ஆக்கிவைத்த கிருஸ்ணபிள்ளையின் வாழ்க்கையை அறியாதிருந்தோர் அறிய வைப்பதற்கும் ஏதுவாயிருந்த இந்தக் கதாப்பிரசங்கம் அனைவராலும் மிகவும் பாராட்டப்பட்டது. இதை நடத்த உதவிய குழுவினரும் கிருஸ்ணபிள்ளையின் விருத்தங்கள் சிலவற்றைப் பரவசமூட்டும் வகையில் பாடி இந்நிகழ்ச்சியைச் சிறப்பித்தனர்.

ஐக்கிய மதிய போசனத்தைத் தொடர்ந்து பிற்பகல் 2.30 மணிக்கு ஆதீன அத்தியட்சர் அவர்களின் தலைமையில் பகிரங்கக் கூட்டம் ஆலயத்தில் நடத்தப்பட்டது. கனம் J. C. மேதர் அவர்கள் வேதப் பகுதி வாசித்து ஜெபம் ஏறெடுத்தனர். மலேசியாவில் அத்தியட்சர் ஆட்சி முறையான மெதடிஸ்த சபையில் ஒருகால் அத்தியட்சராயிருந்து தற்பொழுது ஆசியக் கிறிஸ்த சங்கத்தின் பொதுச் செயலாளராய்க் கடமையாற்றும் கலாநிதி கனம் யாப் கிம் ஹௌ அவர்களை அத்தியட்சர் அவர்கள் சபைக்கு அறிமுகப்படுத்தி வைக்கக் கலாநிதி ஹௌ அவர்கள் உரையாற்றினர்கள். இவர்களுடைய பேச்சைத் தொடர்ந்து அத்தியட்சர் அவர்கள் அறிமுகப் படுத்திவைக்க, கனம் M. அசரையா அவர்கள் உரை வழங்கினர்கள். [இவ்வுரைகளின் சாராம்சங்கள் வேருக்த் தரப்படும் — ஆ-ர்]. இப்பகிரங்கக் கூட்டத்தில் உடுவில் மகளிர் கல்லூரிப் பிள்ளைகள் சிறப்புப் பாட்டுகள் பாடினர். அத்தியட்சர் அவர்களின் செபம் ஆசீர்வாதத்துடன் பகிரங்கக் கூட்டம் பிற்பகல் 4-00 மணிக்கு முடிவடைந்தது.

விழாவைத் தொடர்ந்து சகலரும் ஐக்கிய தேநீர் உபசாரனையிற் பங்குபெற்றனர்.

# சபையின் நோக்கம்

[யாழ். ஆதீனத்தின் 35ஆம் வருடாந்த விழாவில் இடம்பெற்ற பகிரங்கக் கூட்டத்தில் ஆசியக் கிறிஸ்த சங்கத்தின் பொதுச் செயலாளர் கலாநிதி கனம் யாப் கிம் ஹௌ அவர்களும், தென்னிந்திய திருச்சபை, சினட் பேரவையின் பொதுச் செயலாளர் கனம் M. அசரையா அவர்களும் ஆற்றிய உரைகளின் சாராம்சங்கள் ]

**கலாநிதி கனம் யாப் கிம் ஹௌ**

கிழக்காசியக் கிறிஸ்தவ சங்கம் எனப் பெயர் கொண்டிருந்து இப்பொழுது ஆசியக் கிறிஸ்த சங்கமென அழைக்கப்படும் அவைக்கு என்னை அறிமுகப்படுத்தி வைத்தவர் இந்நாட்டைச் சேர்ந்த கலாநிதி கனம் D. T. நைல்ஸ் அவர்களே. [கி. ஆ. கி. சங்கம் ஸ்தாபிக்கப்படுவதற்குப் பொறுப்பாயிருந்தவர்களில் ஒருவரும் அதன் முதலாவது பொதுச் செயலாளரும் கனம் D. T. நைல்ஸ் அவர்கள் என்பதை வாசகர் அறிவர். — ஆ-ர் ] அவர்கள் நிமித்தமாகவும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அநேகம் நண்பர்களை மலேசியாவில் நான் அறியக் கூடியதாயிருந்ததாலும் எனக்கு ஒரு வகையான தொடர்பு இங்கே இருக்கிறதெனலாம்.

உலகத்திலே திருச்சபையின் நோக்கம் என்ன? அதாவது பற்பல இடங்களிலும் ஆலயங்களோடு சம்பந்தப்பட்டதாய் அமைக்கப்பட்டிருக்கும் சபைகளைக் குறித்து நான் பேசவில்லை; கடவுளின் சனமாகிய திருச்சபையைக் குறித்து பேசுகிறேன். நாடுகளின் பொருளாதார, சமூக, சமய அமைப்புக்களைப் பொறுத்ததாய்த் திருச்சபை எடுக்க வேண்டிய பிரதான கரிசனை என்ன? கடவுள் கிரியை செய்துகொண்டே வருகிறார். எனவே அமைப்புகளும் மாறிக்கொண்டே போகின்றன. மாறிக்கொண்டு போகும் இந்நிலைகள் எல்லாவற்றிலும் கடவுளின் சனமாகிய சபை அவருடைய கிரியையில் பங்காளித்துவம் எடுக்க வேண்டியதாயிருக்கிறது. நாம் எந்தக் காலத்தில் எப்பேர்ப்பட்ட உலகில் வாழ்கிறோமா, அந்தக் காலத்திற்கும் உலகத்திற்கும் நற்செய்தியைக் கூற அழைக்கப்பட்டிருக்கும் ஒரு கூட்டத்தினராகவே நம்மை நாம் கணித்துக் கொள்ள வேண்டும்.

இன்று காலையிற் பிரசங்கித்த கனம் அசரையா அவர்கள் குருத்துவ ஊழியம், தீர்க்கதரிசன ஊழியம், மேய்ப்பனுக்குரிய மேற்பார்வை ஊழியம் ஆகிய ஊழிய வகைகளைப் பற்றிக் குறிப்பிட்டதாக அறிகிறேன். இவையனைத்தும் கடவுள் தாமே நடப்பிக்கும் கிரியைகள். மனிதர் அனைவரும் ஜீவனுள்ள கிறிஸ்துவிடம் வழி நடத்தப்படக்கூடியதாய் இவற்றில் கடவுளின் உடன் ஊழியராய் இருப்பதே திருச்சபைக்கு விடப்படும் அழைப்பு. சீஷத்துவம் என்றால் நகரங்களிலானாலும் கிராமங்களிலானாலும், எந்தெந்த மூலைமுடுக்குகளிலேனும், எங்கே மனிதர் மத்தியில் கிறிஸ்து சென்று கொண்டிருக்கிறாரோ அங்கே அவரைப் பின்பற்றுவதே.

சீனாவின் திருச்சபையைப் பற்றி நான் குறிப்பிடலாம். சுமார் ஐம்பது ஆண்டுகளாக அங்கே ஒடுக்குதலும் துன்புறுதலுமே காணப்பட்டன. கிறிஸ்தவர்கள் மறைவிடங்களிலேயே வழிபட வேண்டிய நிர்ப்பந்தங்களும் உண்டாயின. ஆயினும் இப்பொழுதோ ஆயிரக்கணக்கானோர் கடவுளிடமும் திருச்சபைக்கும் வந்தவண்ணமாகவே இருக்கின்றனர். அவர்கள் முன்பாக ஒரு பரந்த காட்சி இருக்கிறது; அது உலகளாவும் ஒரு நற்செய்திப் பணி பற்றிய காட்சி; கடவுளின் சனமாகத் தமக்கும் பங்குள்ள ஒரு பெரும் பொறுப்பு எனக் காணும் மகத்துவமான ஒரு காட்சி. ஆதலால் தீவிரமாக அவர்கள் தம் ஊழியத்தில் முன்னேறி வருகிறார்கள்.

வரும் நாளுக்கான காட்சியை இன்று காண்பதும் அதை நிறைவேற்றப் பொறுப்பேற்பதும் சபையின் சபைச் சனத்தின் கடமையாகும். யாழ்ப்பாணத்தின் திருச்சபை இக்காட்சியைக் கண்டு, அதற்கேற்பத் தனது அழைப்பை நிறைவேற்றும் அருளைப் பெறக் கர்த்தர் தாமே அனுக்கிரகிப்பாராக.

**கனம் M. அசரையா**

உலகில் 45,000 லட்சம் மக்கள் சுமார் 50 பெரிய சமயங்களைச் சேர்ந்தவர்களாய் இருக்கிறார்களெனினும் கடவுளை அப்பா, பிதாவென அழைக்கும் உரிமையும் சிலாக்கியமும் கிறிஸ்தவர்களுக்கே கொடுக்கப்பட்டுள்ளது. கடவுளைப் பிதாவாகக் கண்டு கொள்ளும் வகையை ஆண்டவராகிய இயேசு மனிதருக்குக் காட்டிய கருத்தில் யூத சமயம் கூட எடுத்துக் காட்டுவதற்கில்லையெனப் புகழ் பெற்ற இறையியற் பண்டிதர் ஒருவர் கூறியுள்ளார். தென்னிந்திய திருச்சபையில் பல கலாச்சார முறைகளையும் மொழிகளையும் சேர்ந்தவர்களாக இருபது லட்சம் மக்கள் இருக்கிறோம்; யாவரும் தத்தம் மொழியிலே கடவுளைப் பிதாவென உரிமை பெற்றவர்களாயிருக்கிறோம்.

நமது விசுவாசத்திற்கு அடிப்படையான இன்னொரு சிந்தனை "ஷாலோம்" என்பது — சமாதானம். இது சபை எடுத்துக் காட்டவும் நிலைநாட்டப்படுவதற்கு முயலவும் வேண்டிய ஒரு நிலை. ஆமோஸ் தீர்க்கதரிசி நீதியும் நியாயமும் புரண்டோடும் ஆற்றைப் போற் பரம்பும் ஒரு நிலையைக் குறித்துப் பேசுகிறார் (5 : 24). இப்பேர்ப்பட்ட ஒரு நிலையே இந்தத் தெய்வீக சமாதானத்தைக் காண்பிக்கும் ஒரு நிலையாகும்.

"உம்முடைய இராச்சியம் வருவதாக" எனச் செபிக்கிறோம். இதையடுத்து "உம்முடைய சித்தம் பூவுலகில் செய்யப்படுவதாக" என்கிறோம். இவை இந்தத் தெய்வீக சமாதான நிலையைக் குறித்த வேண்டுதல்களே. கடவுளின் ஆட்சிக்குள்ளான நிலை, இத்தனையும் திருச்சபை ஆற்றி வந்த செயல்கள் அனைத்தும், அது இப்போதே செய்துவரும் கிரியைகளும் வரவிருக்கும் அந்த இராச்சியத்தின் முன் அடையாளங்களே. இதை உலகிற்கு அறிவிப்பதும், அவருடைய ஆளுகையைக் குறித்து "உம்முடைய வெற்றிக் கொடி பறக்கட்டும்" எனச் செபிப்பதும் திருச்சபைக்குக் கொடுக்கப்படும் பொறுப்பாயுள்ளது.

## உதவிக் குரு அபிடேகம்

தெ. இ. திருச்சபை, யாழ். ஆதீனத்தில் நுணுவிற் சபையின் ஊழியனாகக் கடமையாற்றும் திரு. டானியல் S. தியாகராஜா அவர்கள் இம்மாதம் 2 ஆம் திகதி நடந்த ஆதீன விழாத் திருவிருந்து ஆராதனை வேளையில் உதவிக் குருவாக ஆதீன அத்தியட்சர் அவர்களினால் அபிடேகம் செய்யப்பட்டார்கள்.

இவர்கள் தலைமையாசிரியராயிருந்து வேலை ஓய்வுபெற்றுள்ள திரு. R. K. தியாகராஜா, திருமதி நயசரராஜா ஆகியோரின் மகன். சிலகாலம் ஆதீனத்தின் உடுவில், தெல்லிப்பழைச் சபைகளின் பயிற்சியாளனாகக் கடமையாற்றிய இவர் மதுரை அரசரடியிலுள்ள தமிழ்நாடு இறையியற் கல்லூரியைச் சேர்ந்து படித்து B. D. பட்டப் பரீட்சையில் திறமைச் சித்தி பெற்றவர். 1981 மே முதலாகக் கொழும்புச் சபையில் உதவி ஊழியனாகக் கடமையாற்றிய பின் சென்ற மாதம் நுணுவிற் சபைக்குப் பொறுப்பான ஊழியனாக இடமாற்றம் பெற்றவர்.

இவர்களின் ஊழியம் மகிமை சிறந்து விளங்க வேண்டுமென ஆசித்துத் தாரகை இவர்களை வாழ்த்துகிறது.

## தே. ராஜரீகம்

கருமை பூத்த பொறுமை மலை.

ஐந்து அருவிகள் பாய்ந்த மலை ஒன்று தமிழருவி. ஒன்று ஆங்கில மொழியருவி. ஒன்று எபிரேய மொழியருவி. ஒன்று கிரேக்க மொழியருவி. ஒன்று தேவியல் அருவி,

வளமார்ந்த மலை.

அந்த மலை சாய்ந்துவிட்டது! என்ன செய்வோம்?

மறைத்திருவாளர் தே. ராஜரீகம் அவர்கள் தமிழ்த் திருச்சபையின் அகத்தியராக விளங்கியவர். கல்விக் கடலைப் பருகிய அகத்தியர்!

திருச்சபைத் தாபனங்களுக்கு அரிய காட்சி இருந்திருந்தால் நம்முடைய மறைத் திருவாளர்க்குப் பல டாக்டர் பட்டங்களை வழங்கியிருக்கலாம்.

அவருடைய மறைவு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும், பல மொழிகளிற் புலமையும், தேவியல் தெள்ளறிவும், ஆழமான கிறிஸ்தவ அனுபவமும் பழுத்த பெரியவர் மறைந்துவிட்டார்.

தேவியல் துறையிலும், திருச்சபை வரலாற்றுத் துறையிலும், சொல்லாராய்ச்சித் துறையிலும் அரிய நூல்கள் பல வழங்கிய நம் பெரியவர் இறுதியில் பல ஆண்டுகளாக விவிலியத்தை நல்ல தமிழில் மொழி பெயர்க்கும் அரிய தொண்டில் ஈடுபட்டிருந்தார்கள். "இந்தியா வேதாகமச் சங்கம்" என்ற அமைப்பினால் நிறுவப்பட்டுள்ள தமிழ் மொழிபெயர்ப்புக் குழுவிற்குத் தலைமையேற்று அப்பணியைத் திறம்படச் செய்துவந்தார்கள். விவிலியத்தின் புதிய ஏற்பாட்டுப் பகுதியைத் திறம்பட மொழிபெயர்த்து முடித்து அச்சேற்றி வாகை சூடினார்கள். பழைய ஏற்பாட்டுப் பகுதி மொழிபெயர்ப்பு நிகழ்ந்து கொண்டிருக்கிறது; இவர்கள் கண் மூடி விட்டார்கள்.

எனினும் பெரியவர் ஏற்றி வைத்த விளக்கு அணையாது. அவருடைய உழைப்பு பயனற்றுப் போகாது. அது வளரும்.

பன்மொழிப் புலவராம் நம் தமிழ்க் கொண்டல் மறைத்திருவாளர் தே. ராஜரீகம் கடவுளின் நேரிடையான திருமுன்பில் விவிலியத்தை நற்றமிழால் பாடி மகிழ்ந்து கொண்டிருக்கிறார்.

மறைவாணர் குடும்பத்தார்க்கு ஆறுதல் சொல்லுகிறோம்.

இத்தகு அன்புக்கொடையை நமக்கு அளித்திருந்த கடவுளைப் போற்றுகிறோம்.

— நிருபர் —

## நீர்யானையும் முதலையும்

விவிலியத்தின் முதல் தொகுதி (பழைய ஏற்பாடு) எபிரேய மொழியில் உள்ளது. இரண்டாம் தொகுதி (புதிய ஏற்பாடு) கிரேக்க மொழியில் உள்ளது. இவற்றிலிருந்துதான் விவிலியத் திருமறை உலகின் மற்ற மொழிகளில் பெயர்க்கப்பட்டுள்ளது. இக்காலத்தில் விவிலியத்தின் மிகப் பழைய ஏடுகள் கிடைத்திருப்பதால், அவற்றின் அடிப்படையில் பல மொழிகளிலும் மொழிபெயர்ப்புகள் உருவாகிக் கொண்டு வருகின்றன.

விவிலிய மொழிபெயர்ப்பில் எத்தனையோ சிக்கல்கள் ஏற்பட்டுவிடும். ஒரே ஒரு சான்று.

யோபு என்றொரு காவியம் அத் திருமறையின் முதல் தொகுதியில் இருக்கிறது. அந்த நூலில் இரண்டு விலங்குகள் வருகின்றன. ஒன்று "பிகமோத்" என்பது. மற்றொன்று "லிவியாதான்" என்பது. இவற்றிற்கு இக்காலத்தில் என்ன பெயர் என்பதை அறுதியிட்டுச் சொல்ல முடிவதில்லை. லிவியாதானைச் சிலர் 'திமிங்கிலம்' என்று மொழிபெயர்த்திருக்கிறார்கள் போகிறது. பிகமோத்தைச் சிலர் 'நீர்யானை' எனவும் வேறு சிலர் 'முதலை' எனவும் மொழிபெயர்க்கின்றனர். இவற்றைத் தொடர்ந்து வருகின்ற வாக்கியத்தின் மொழிபெயர்ப்பு நமக்குச் சுவையூட்டுகின்றது!

பிகமோத்தை (நீர்யானையை)க் கவனித்துப் பார்... அது மாட்டைப்போல் புல்லைத் தின்னும்!

பிகமோத்தை (முதலையை)க் கவனித்துப் பார்... அது புல்லைப் போல் மாட்டைத் தின்னும்.

## கவிதை

மரபுக் கவிதை என்பது மேகங்களால் மறைக்கப்பட்டுள்ள கதிரவனைப் போன்றதாகும். யாப்பிலக்கணப்படி அமைந்த செய்யுளே மேகம்; எழிலினைப் பொழிகின்ற எழிலி. கவிதை எனும் கதிரவன் அதன் பின் மறைந்திருந்து தன் கிரணக் கைகளைத் திசையெங்கும் நீட்டுகின்றான்; மேகத்தின் விளிம்புகளுக்குப் பொன்முலாம் பூசுகிறான். அங்கு அழகின் திருவோலக்கத்தைக் கண்ணாரக் கண்டு கண்டு மகிழலாம்.

மேகச் சிறையிலிருந்து விடுபட்டு வெளியே வந்து தட்டுத் தடை இல்லாமல் ஒளி மழையைக் கொட்டுகின்ற கதிரவன் புதுக் கவிதை. அந்த ஒளி வெள்ளத்தில் கவிஞனும் மூழ்கி விடுகின்றான். கற்கின்றவனும் மூழ்கிவிடுகின்றான். காண்பது மறைந்து மூழ்குவது நிகழ்கின்றது.

செய்யுள் வேறு, கவிதை வேறு.

செய்யுளில் கவிதையை வைப்பது பழைய மரபு.

கவிதையை அப்படியே அள்ளிக் கையில் வைத்து விடுவது புதிய மரபு.

கவிதை செய்யுளிலும் நடமாடும்; உரை நடையிலும் உலாவும்.

கவிதையே இல்லாத செய்யுளும் உண்டு!

வைக்கோற் கூளத்தைப் போன்றொரு உரைநடை புதுக் கவிதை என்ற பெயரில் திரிவதும் உண்டு!

உண்மையழகும் உள்ளுணர்ச்சியும் ஆகிய இரண்டிற்கும் நிறைவுற்ற திருமணத்தின் விளைவுதான் கவிதை.

— P. S. சத்தியசாட்சி.

*EDITORIAL*

## A Clear Acceptance

We are happy that President Jeyawardene has obtained a *52.91* percentage of votes at the Presidential Elections on 20-10-82 and has been duly elected President of the Republic of Sri Lanka for a further period of six years'

A very welcome feature of the Presidential polls is that the country has not, as many thought, turned into a pressure cooker of racial tensions, after the polling.

The reason for this happy trend is not far to seek. The paramount interest of the voters as reflected in the voting patterns of the various electoral districts, appeared to be a compelling desire to preserve what has been gained during the period 1977 — 1982, rather than display an unseemly obsession with the blots and blemishes of the ruling party, which at the early stages of the election campaign did not really appear to have a serious contender.

There was no doubt a last minute surge made by the SLFP but it was unfocussed and meandering and failed to make an impact on the people who are eager to latch on to a few small pleasures of life rather be the target of a belt — tightening programme — the distinguishing hall mark of the SLFP regime.

In this political context, it was not a surprise that the Jaffna verdict ruffled feathers in many political circles, and has been flashed in the national dailies as an underwhelming event.

"When a thing ceases to be a subject of controversy" says William Hazlitt, "it ceases to be a subject of interest". It is not altogether a misfortune that Jaffna should occasionally be in the news. Otherwise it would cease to be 'a subject of interest' which plight in our view is politically more disastrous for Jaffna than its present status as a district that off and on, tends to acquire, according to political observers, a lugubrious distinction.

The Election score board on 20-10-82 did indicate a swing in Jaffna towards the SLFP, which was foisted higher than the UNP. But it would be naive, on this score, for anyone to conclude that 'onions and chillies' loom large in the harizons of the Jaffna people.

Out of a voting strength of 493705 voters, the number of valid votes cast was only 218003. The "rejected votes" in the Jaffna Electoral District was a staggering 10610 votes (the highest recorded in the 22 electoral districts of Sri Lanka) — an indication, no doubt, not of increasing illiteracy but of increasing apathy.

In this context, we are happy that in the very first interview with the Press, President Jeyawardene has said that the TULF "Dialogne" with the government will be continued.

*For the Record*

### Results of the First Presidential Election (20-10-82)

| | | |
|---|---|---|
| UNP | — 34,50,811 | — 52.9 % |
| SLFP | — 25,48,438 | — 39.07% |
| JVP | — 2,73,428 | — 4.19% |
| TC | — 1,73,934 | — 2.67% |
| LSSP | — 58,331 | — .9 % |
| NSSP | — 17,005 | — .6 % |

Total Number of Valid Votes — 65,22,147

Total Number of Rejected Votes — 85,520

Total Number of Registered Votes — 81,45,015

### Voting Patterns in the 22 Districts

The *UNP* polled more votes than the *SLFP* in every district except Jaffna. The strongholds of the UNP were Colombo, Nuwara Eliya, Puttalam, Matale and Badulla in each of which districts the UNP votes exceeded the SLFP votes by a substantial majority. In Colombo the UNP polled 4,36,290 votes as against 2,76,476 of the SLFP. The highest percentage was 63.10 at Nuwara Eliya scored by the UNP.

The *JVP*, a new comer appears to have established a footing in Gampaha, Galle, Matara, Hambantota, in each of which districts the party has polled more than 20,000 votes.

The highest that the *LSSP* was able to poll was in Kalutura where the party got 8613 votes. The highest that the *NSSP* was able to poll was in Ratnapura where it polled 3494 votes. The second highest score for the NSSP was in Jaffna.

*The Tamil Congress* strongholds were Jaffna and Batticaloa where the party polled 87,263 (finishing first in the Jaffna electoral District) and 47,095 (finishing second in the Batticaloa Electoral Distrect). In the Trincomalee and Vanni Districts, the Tamil Congress polled more than 10,000 votes.

*JDCSI*

### House of Hope, Inuvil

The children of the *House of Hope* Inuvil were taken for a picnic on Saturday (16-10-82) to Keerimalai where they had a dip in the tank, had a buffet lunch on the beach and enjoyed themselves thoroughly under the supervision of their Warden, Matrons and the Pastor of the Inuvil Church, Mr. V. Rajkumar.

The picnic was organised for these disabled children by the Inuvil JDCSI Church. The Uduvil YMCA came forward to make arrangements for the transport of the children.

The *House of Hope* for Disabled Children was started by the Jaffna Diocese of the Church of South India in December last year.

## The Disabled and the Hostile Society

Allen Dykstra and his wife were a healthy, happy loving young couple. But disaster struck the family one day. Allen met with a nasty accident. His life hung on a slender thread. Even if he came round, the only prospect was that he would be a quadriplegic (a person who is paralysed from the neck down). It took the doctors five years fighting for his life. During those years, the doctors asked his wife many times as to whether they should continue to work to save her hnsbands life. Every time the wife's answer was a very firm 'yes'. Allen can now move one of his arms slightly and manage to activate an electric type-writer effectively enough to produce articles for a magazine called 'The Banner' About his wife's unflinching stand by him, he says 'That takes special love. That is commitment'. Just liking is only the agreement of like minded people. True love is the conviction of the Spirit. It does not waver under stress, but achieves the impossible under strain. "Love never fails" Allan was severely disabled but not severely handicapped because of the love and support of his wife.

In ordinary language the words disabled and handicapped are used interchangeably. But there is a world of difference between the two. A disability refers to the way a person is. His disability may be blindness, deafness, cerebral palsy, mental retardation or something brought on by an accident. But handicap involves two factors (1) The way his environment is. (2) The way other people treat him. To meet the first factor much has been done and is being done. Buildings are designed, and machines are so engineered, and curbs and other obstacles so removed that the disabled feel no handicap at all. But the second factor is the most formidable and greatest handicap, namely our attitude to the disabled which is one of HATE. One may think that to describe the attitude as HATE is too far fetched. While it may be true that our feelings towards the disabled are not the same as the raging irrational, deadly emotion. that arises between two swprn enemies. Yet the end result is the same-namely that feeling that enables us to conclude that we would prefer to have this or that person removed from our lives. So the greatest handicap of the disabled is the way we hate them.

The Nazi Regime in Germany murdered in cold blood 50,000 mental defectives. One could not say that all were demented maniacs. Many suffered from ordinary mental diseases we suffer from even now. It is said that even a cleft palate was enough for the death sentence. A notorious case was reported recently from the Mount Sinai School of Medicine as a triumph of modern medical technology. In this case, one of the twins in a mother's womb was destroyed because this one was abnormal. The abnormal twin had Down's syndrome and had to be destroyed! When the case was written up in the New England Journal of Medicine, it was pointed out that the doctors could have killed the wrong twin! Or even both of them!! Our society has come to the point where the abnormal will be destroyed. This is a blatant expression of the morbid hatred that infects society today with respect to the disabled.

Adjustment of buildings and curbs hardly touches the problem of the disabled, unless the deep-seated resentment toward them found in our hearts these days, is eradicated. When we talk about the disabled, we talk about the fact that they are a burden, and we dont want to carrp burdens. We dont want to be reminded of the fact that not everyone is athletic, strong and robust as the people we see on the T. V. and slick magazines. This is the great age of self indulgence, when glorious specimens of humanity enjoy themselves to the full, They want every convenience and comfort, every type of gadjet to make life easy, and the best of food, drink, entertainment and company. Enjoy, enjoy, enjoy — that is the watch word of the age we are living in. And the disabled dont measure up in such society and their presence is resented. They are marginalised, and we can even remove them from the protection of the law, making it possible to destroy them if we can detect their disability soon enough!

Let us not forget that we all have onr disabilities — there are certain things one cannot do because of one's age, height, intelectual limitations and so on. Disabilities are only a matter of degree. Let us also remind ourselves that disabilities can come to anyone, at any time, as it happened to Allen. After all, the disabled are a reminder that all is not well with man and his universe. There is something really and truly wrong with humanity. The Christian answer is clear — Man is fallen and so the universe. Sin is a fact. All men are deformed in their character, and become tools in the hands of the powers of evil to hate and to destroy.

In this situation only Jesus can liberate us. During His earthly ministry Jesus went all out to love the disabled, deformed and the diseased, and raised them to new levels of experience through His healing. Today the challenge comes to those who belong to Jesus to remove the handicap caused to the disabled by our inhumau attitude to them. Only Jesus can liberate us from sin, hatred and deformity of character and so renew us that we become filled with the powerful, re-creating, overcoming love of God. Jesus thus enables us to love and serve our neighbour even the disabled, so that they come to enjoy to the fullest extent the rich goodness of human experience.

"Love does no wrong to a neighbour." Rom. 13 : 10.

(S. D. H.)

*Registered as a Newspaper at the G.P.O., Sri Lanka under No. QB/59/300/26/82.*
Printed for the Jaffna Diocese of the Church of South India at Sri Sanmuganatha Press, Kankesanthurai Road, Jaffna on Friday, 22nd October 1982 and published by Mr. Alvappillai Rajasingam, 330 Navalar Road, Jaffna.